6th September 1960]

SRI P. S. CHINNADURAI : இந்த சுற்றுப் பிரயாணத்தின் போது பல கிராமங்களுக்கு விஜயம் செய்வதற்கான வாய்ப்பு முதல் அமைச்சர் அவர்களுக்கு ஏற்பட்டது. அதனால் அநேகமாக நன்மையே ஏற்பட்டிருக்கும் என்று கருதுகிறேன். இதைப் போல கோவை ஜில்லாவில் பல்லடம் தாலுகா பகுதியிலே முதல் அமைச்சர் அவர்களும், விவசாயத் துறை அமைச்சர் அவர்களும் சுற்றுப்பிரயாணம் செய்ய முன்வருவார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : கனம் அங்கத்தினர் அவர்களே இதுமாதிரி மந்திரிகளை சுற்றுப்பிரயாணம் செய்ய வேண்டும் என்று அழைத்ததை நான் வரவேற்கிறேன். அவர்கள் அந்த அழைப்பை ஏற்றுக்கொள்ளுவார்கள் என்று நான் நம்புகிறேன்.

Schools for the blind

* 485-B *Q.*—SRI P. G. MANICKAM : கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) 1960-ல் சென்னை ராஜ்யத்தில் (1) அரசாங்கத்தாரால, (2) தனிப்பட்டவர்களால் நடத்தப்படும் குருடர்களுக்கான பள்ளிக்கூடங்கள் எத்தனை ?

(ஆ) இப்பள்ளிக்கூடங்களிலே எத்தனை மாணவர்களும், மாணவிகளும் படிக்கிறார்கள் ?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) Government Schools 2 and Private Schools 3.

(*b*) 314 boys and 157 girls as on 31st March 1959.

SRI P. G. MANICKAM : இவர்களுக்கு தொழில் பயிற்சிகூட அளிக்கப்படுகிறதா? அவ்வாறு தொழில் பயிற்சி அளிக்கப்பட்டால் எந்தவிதமான தொழில் பயிற்சி அளிக்கப்படுகிறது ?

THE HON. SRI C. SUBRAMANIAM : ஆம், இவர்களுக்கு தொழில் பயிற்சியும் அளிக்கப்பட்டு வருகிறது. இதுமாதிரி கண் இல்லாதவர்கள் செய்யக்கூடிய பல தொழில்கள் இருக்கின்றன. 'டைப்ரைடிங், கார்பெண்டரி வொர்க், பாஸ்கெட் விவிங்,' இது மாதிரி பல தொழில்கள் சொல்லிக் கொடுக்கப்படுகின்றன.

Pay Commission

* 485-C *Q.*—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Finance be pleased to state whether there is any proposal to make the rules issued on the recommendations of the Pay Commission applicable to persons who have retired and have been re-employed and are actually on duty on the date of the issue of these rules?

THE HON. SRI C. SUBRAMANIAM : No, Sir.

SRI N. K. PALANISAMI : Sir, since the re-employed persons continue to do the same work, will the Government be pleased to make these rules applicable to them?

THE HON. SRI C. SUBRAMANIAM: 'ரி-எம்ப்ளாய்மெண்டு' செய்வதே அவர்களுக்கு சலுகை கொடுப்பதுமாதிரி ஆகும். அவர்கள் ஏற்கனவே வேலையிலிருந்து ரிடையர் ஆனவர்கள், அதற்குப் பிற்பாடு 'காண்டிராக்ட் பேஸிஸில்' 'ரி-எம்ப்ளாய்' செய்யப்பட்டிருக்கிறார்கள். 'ரி-எம்ப்ளாய்' செய்யப்பட்டவர்களுக்கு கொடுத்தால், அவர்களுக்கு மட்டும் கொடுத்து நிறுத்திவிட முடியாது, எல்லோருக்கும் கொடுத்தாகவேண்டி வரும்.

Engineering Colleges (selection)

* 485-D Q.—SRI T. S. RAMASWAMI: Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) the number of applicants from each district to the Engineering Colleges in the State in 1960;

(*b*) the number selected in each district; and

(*c*) the basis adopted in the allocation of seats to each district?

THE HON. SRI C. SUBRAMANIAM: (*a*), (*b*) & (*c*) A statement[a] is placed on the table of the House.

SRI T. S. RAMASWAMI: May I know, Sir, why Madras City has been allotted additional seats from the point of view of the population?

THE HON. SRI C. SUBRAMANIAM: இப்பொழுது ஒவ்வொரு ஜில்லாவுக்கும் இவ்வளவு ஸ்தானங்கள் என்று ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், ஷெட்யூல்டு காஸ்டு, ஷெட்யூல்டு டிரைப்-ஐ பொறுத்தவரையில் பொதுவாக மாகாணம் முழுவதற்கும் ஸ்தானங்கள் ஒதுக்கப்பட்டிருக்கிறது. போதுமான அளவு அதற்கான மாணவர்கள் இல்லாமல் அதில் காலியாக இருக்கக்கூடிய ஸ்தானங்கள் பொதுவாக ஒதுக்கப்பட்டு, அதில் மூன்றில் ஒரு பங்கு மதராஸ் ஸிடிக்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது.

SRI T. S. RAMASWAMI: மதராஸ் ஸிடியிலுள்ளவர்கள் பல ஜில்லாக்களிலிருந்து இங்கு வந்து குடியேறியவர்கள். ஆகவே, அவர்கள் அவர்களுடைய ஜில்லாவுக்குள்ள நேடிவிடி ஸர்டிபிகேட்டைக் கொடுத்து மனுச் செய்துகொள்ளுகிறார்கள். அவர்களுக்கு அந்த வாய்ப்பு இருக்கும்பொழுது, மூன்றில் ஒரு பங்கு ஸ்தானங்களை மதராஸ் ஸிடிக்குமட்டும் ஏன் ஒதுக்கவேண்டும். அதை எல்லா ஜில்லாக்களுக்கும் பகிர்ந்து கொடுக்கக்கூடாதா?

THE HON. SRI C. SUBRAMANIAM: ஒரு இடத்திற்குத்தான் அவர்கள் நேடிவிடி ஸர்டிபிகேட் கொடுக்கமுடியும். ஒன்று மதராஸ் ஸிடிக்கு கொடுக்கமுடியும், அல்லது அவர்களுடைய ஜில்லாவுக்கு கொடுக்கமுடியும். இரண்டு இடங்களுக்கும் கொடுக்கமுடியாது. சென்னை நகரத்திற்கு போடவில்லையென்றால், இன்னொரு பக்கத்தில் ஒரு ஜில்லாவுக்கு போடலாம். அது அவர்கள் செய்ய வேண்டிய முடிவு. கனம் அங்கத்தினர் பார்ப்பார்களேயானால் கோவை ஜில்லாவில் 332 விண்ணப்பங்கள் வந்திருக்கின்றன.

[a] Printed as Appendix III on pages 220–222 infra.